சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## Case No. OS. 246/2022

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயமணி | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | சின்னசாமி | ஜாதி | |
| கிராமம் | கீழ்அரசம்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | வேலூர் | வயது | |

18.10.2024 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 22.09.2017 தேதியிட்ட அசல் கிரய ஒப்பந்த பத்திரம் **வா.சா.ஆ.1,** (வா.சா.ஆ1 பிரதிவாதித்தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 16.08.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3,** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.